## கடற்கரை கவியரங்கு– 653

நாள்: **07-09-2025**

# கடற்கரை கவியரங்கு கவிதைகள்

காணும் இன்பக் காட்சியாவும் கவிதையாவதில்லை!
தானும் அதிலே தோய்ந்தமனமே கவிதைதனைக் கூறும்!
வானும் மண்ணும் வாய்த்தன யாவும் கண்வழி ஆகிட,
ஊனாம் உடலும் உள்ளம் எழுதிடத் தானும் மகிழும்!

வானும் மண்ணும் பேணும் அழகே மாட்சிமையாகும்!
தானாய் மாறும் தகைமையாவும் கவிதைதானே கூட்டும்!
தேனும் கனியும் திகட்டும் நாளதுவும் ஒருநாள் உண்டு!
ஆணும் பெண்ணும் கூட்டும் இன்பம் தோய்ந்தும் போகும்!

விணாய்க் குழம்பும் வேதனை மனமும் தெளிவதும் உண்டு!
கானா அமுதமெனக் கண்டு சொன்னவன் பாரதி!
காடும் மலையும் காட்சியில் நிறைந்திடத் தனது,
தேடும் உறவில் தெய்வநிலை யென்றும் சொன்னான்!

பாடிய வரிகளால் பாரினில் உயர்ந்தே நின்றான்!
கேடில் விழிச்செல்வம் கல்வியென்றான் வள்ளுவன்!
மூடிய விழியுள் முகவரிதந்து, வாழ்வியல் சொல்லி,
தேடியயாவும் தந்தான் எனவாய் உலகம் போற்ற,

கூடிய அறிவைக் கூட்டிய தமிழால் நிறைந்தார் தாமே!
ஆடும் விழுதின் அழகைச் சொல்லும் கவிதை!
பாடும் குயிலின் பக்கத்தில் நிற்பது கவிதையுள்ளம்!
வாடும் உள்ளம் வகையறிந்து ஒழுகும் கவிதை!

வஞ்சனை இல்லா உள்ளம் யாவிலும் நாளும்,
செஞ்சுடராய் சிலிர்த்து எழுவதே கவிதை!
பஞ்சமில் சொற்களும் பக்குவமாய் அரங்கம் ஏற,
தஞ்சமாகிக் கவிதைத் தாமும் தரணியில் உயரும்!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்.** 06-04-2025